1974 மார்ச் 13]

திருப்பூர் பகுதியிலுள்ள வீட்டுமனைகள்.

*403 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொகுதியில் உள்ள அரசு நிலங்களில், வீட்டு மனைப் பட்டா கொடுக்கத் தகுதி உள்ள இடங்கள் எவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: விவர அறிக்கை* ஒன்று சட்டப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. என். குமாரசாமி: இந்த அரசாங்கம் நத்தம் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்கும்போது, முன்கூட்டியே அனுமதி இல்லாமலேயே பல இடங்களில் பல வருஷங்களாக வீடு கட்டி யிருக்கிறார்களே, அதையும் கணக்கில் எடுத்து அவர்களுக்கு பட்டா வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பட்டா வழங்குவதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. அதன்படி வழங்கப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, சொந்த வீடு இல்லாத ஏழை மக்கள் பற்றிய சென்சஸ் எடுக்கப்பட்டதே, அதன்படி எத்தனை பேர் வீடு இல்லாமல் இருக்கிறார்கள்? வீட்டு மனை கொடுக்க மத்திய அரசும் பண உதவி கொடுக்க இருக்கிறதல்லவா? ஆகவே, சொந்த வீடு இல்லாதவர் களுக்கு வீட்டு மனை வழங்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வீட்டு வசதி வாரிய அமைச்சருக்கு இந்தக் கேள்வியைப் போட்டால் விபரம் தருவார்கள்; என்னிடம் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: சார், பட்டா வழங்குவதற்கு விதிமுறைகள் இருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். எல்லா விஷயங்களுக்குமே விதிமுறைகள் இருக்கின்றன. விதிமுறை இல்லாமல் எதுவும் இருக்கக் கூடாது. ஆனால் வீட்டு மனைகள் வழங்குவது பற்றிய விதிமுறைகள் பழமையானதாகவோ, பலனற்றதாகவோ அல்லது பொருந்தாததாகவோ இருந்தால் அவற்றை ஆராய்ந்து பார்த்து சில விஷயங்களில் விலக்களித்து, பட்டா வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்போதே ஏராள மானவர்களுக்கு பட்டா கொடுத்திருக்கிறோம். விதிமுறைகளை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

---

* 350–351-ம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.